DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 21/2021 |
| Session | ... | |
| | | Prosecution / PW-8 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.விவேகானந்தன் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1, A3, A4 are present. A2 absent U/s.317 Cr.P.C petition filed heard and allowed.).

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 09.05.2023

---

**முதல் விசாரணை**

1. நான் ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். தற்போது இராமநாதபுரத்தில் வசித்து வருகிறேன்.

2. கடந்த 14.09.2019ம் தேதி காலை 06.00 மணிக்கு ஆர்.எஸ்.மங்கலம் காவல்நிலைய நிலையத்திர்ல நான் நிலைய பொறுப்பிலிருந்த போது

இராமநாதபுரம் அரசு மருத்தவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மேற்படி மருத்துவமனை சென்று வழக்கின் புகார்தாரரான அ.சா.1 அசோகன் அளித்த புகார்வாக்குமூலத்தை பதிவுசெய்து நிலையம் வந்து நிலைய குற்ற எண்.165/2019 ல் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**).

2. பின் வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 14.09.2019 ம் தேதி 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மனோகரன், பாண்டி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ 4, மாதிரி வரைபடம் அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

3. பின் அன்றைய தினமே புகார்தாரர் அ.சா.1 அசோகன், லதா, மகேந்திரன், பன்னீர்செல்வம், காளியம்மாள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முன்பிணை பெற்றுவிட்டபடியால் கைது செய்யப்படவில்லை.

4. பின் வழக்கின் புகார்தாரரான அ.சா.1 அசோகனுக்கு மருத்துவ சிகிச்சையளித்த இராமநாதபுரம் அரசு மருத்துவமனை மருத்துவரான விமல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, மேற்படி அ.சா.1 ற்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்பதாக கண்டு அ.சா.1 ன் காயச்சான்றிதழ் பெற்றேன்.

5. பின் வழக்கின் புலன் விசாரணை முடித்து 04.10.2019 ம் தேதி எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 13.09.2019 ம் தேதி மாலை 04.00

மணிக்கு என்றால் சரிதான். புகார் அளித்த தேதி 14.09.2019 ம் தேதி காலை 09.00 மணிக்கு என்றால் சரிதான். 14.09.2019 ம் தேதி அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கால தாமத காரணத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்

2. காவல் நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 5 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். புகார்தாரர் இருசக்கர வாகனம் அல்லது காரில் காவல் நிலையத்திற்கு வந்தால் சுமார் அரைமணி நேரத்தில் வந்துவிடலாம்.

3. புகார்வாக்குமூலம் 14.09.2019 ம் தேதி இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் MS Ward ல் வைத்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளுக்கும் புகார்தராரருக்கும் ஏற்கனேவே கோவிலில் சாமிகும்பிடுவது தொடர்பான முன்விரோதம் உள்ளதை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன்.

4. அ.சா.2 லதா, அ.சா.3 மகேந்திரன், அ.சா.4 பன்னீர்செல்வம் ஆகியோர்கள் அ.சா.1 ன் உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தின் அருகில் காளிமுத்து, மலைச்சாமி, தாமோதிரன், கணேசன் ஆகியோர்கள் வீடுகள் உள்ளது அவர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால சரிதான்

5. மேற்படியார்களை விசாரித்து இருந்தால் இவ்வழக்கின் உண்மைத்தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் சவுக்கட்டைகளை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

6. அ.சா.1 முதலுதவி சிகிச்சை பெற்றதாக சொல்லப்படும் ஆர்.எஸ்.மங்கலம் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

7. மேற்படி மருத்துவரை விசாரித்து இருந்தால் அ.சா.1ன் காயத்தின் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரிதான். அ.சா.1ற்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே உள்ள முன்விரோதத்தை பயன்படுத்தி அளிக்கப்ட்ட பொய் புகாரை முறையாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல

8. வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் அவசர கதியில் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.